------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 1981 ஆம் ஆண்டு 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக சட்டத்தில் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பில் கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் குறித்து ஒதுக்கிய அதிகாரத்துவத்துடன் செயற்படுதல், ஏற்புடையதாகும் அறிக்கையிடல் தரங்களுக்கு ஒழுங்கமைவாக நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல்வாங்கல்களை குறிப்பு வைத்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பராமரித்தல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பிடப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடு பெற்றுக்கொள்ளுதல் போதுமானதாகும். “சிறப்பாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு நிருவாக முறைமை நிறுவனத்தால் பராமரிக்கப்படுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அஉரிய நியமங்களுக்கு ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மதிப்பீட்டு திணைக்களம் மூலம் மீள்கணிப்பீடு செய்வதனை ஆரம்பிக்கப்பட்டுள்ள தளவாடங்கள், | பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவினம் ரூபா.216,860,050 ஆன சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முற்றுமுழுதாக தேய்மானம் அடைந்திருந்த போதிலும், மேலும் பயன்பாட்டில் காணப்பட்டது. அதன்படி ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை பொதுதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உபகரணங்கள் மற்றும் பட்டப்டிப்பு லோகு என்பவற்றின் பெறுமதிகளை 2023 ஆம் ஆண்டில் குறித்த கணக்குகளில் எடுக்கப்படவுள்ளதுடன், திரைச்சீலைகள் மற்றும் நிலவிரிப்புகள் 2023 ஆம் ஆண்டில் மீள் கணிப்பீடு செய்யப்படும்.<br><br>வாகனங்கள் அரசாங்கத்தின் மதிப்பீட்டு திணைக்களத்தால் 2023.04.10 ஆம் திகதி மதிப்பிடப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் மீள்கணிப்பீட்டு பெறுமதிகள் சீராக்குவதற்கு எதிர்பார்க்கப்படும். | நடவடிக்கை மேற்கொள்ளு-தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.1,025,338 ஆன அன்பளிப்பு தொடர்பில், இலங்கை பொதுதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 படி அடையாளம் காணுதல் மற்றும் அளவிடல் மேற்கொண்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்படவில்லை. | 2023 ஆண்டு தொடக்கம் பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 பிரகாரம் நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளு-தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | மகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி சனாதிபதி செயலகத்தால் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா.6,750,000 ஆன இரண்டு வாகனங்களையும் கணக்கு வைப்பதற்கு மீளாய்விற்கான ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த இரண்டு வாகனங்களின் உரிமை பல்கலைக்கழகத்திடம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ஒப்படைக்கப்பட்டிருப்பினும், மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் சான்றிதழ் பல்கலைக்கழகத்திடம் 2023 ஆண்டு பெப்ருவரி மாதம் கிடைக்கப்பெற்றுள்ளது. 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி அரசாங்கத்தின் மதிப்பீட்டு திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டது. வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமை பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கும் வரை மதிப்பீட்டு திணைக்களம் மதிப்பிடவில்லை. | பயன்பாட்டில் உள்ள நிலையான சொத்துக்களை உரிய வகையில் மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.4 இணங்கப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுகள் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கைகள் படி பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | புலமைப் பரிசில் மற்றும் அன்பளிப்பு தொகை | ரூபா .642,020 | ரூபா .285,480 | ரூபா .356,540 | 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 29 ஆம் திகதி அந்த கணக்கில் ரூபா.356,540 ஆன காசோலை வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த காசோலை 2023 ஆம் | சேமிப்பு வங்கிப் புத்தகம் பிரகாரம் ஆண்டின் இறுதி திகதியிலான மீதி நிதிக் கூற்றுகளுக்கு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆண்டு சனவரி மாதம் 03 ஆம் திகதி காசாக்கப்பட்டுள்ளதுடன், கணக்குகளில் புலமைப் பரிசில் மற்றும் அன்பளிப்பு நிதியத்தில் சேமிப்பு வைப்புத் தொகையாக ரூபா.642,020 ஐ காண்பிக்கப்படுதல் செவ்வையானதாகும். | சமமாதல் வேண்டும். |
| (ஆ) | மரப் பொருட்களை கணக்கு வைக்கப்படுதல் | ரூபா 1,485,475 | ரூபா 316,450 | ரூபா.1,169,025 | நிதிக் கூற்றுகளின் படி மரப் பொருட்களின் கணக்கின் பெறுமதி, மரப் பொருட்களின் பேரேடு கணக்கு மற்றும் நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் வேறுபாடு இல்லாமை | புதில் ஏற்றுக்கொள்வதற்கு முடியாது. நிதிக் கூற்றுகளின் பெறுமதிக-ளுடன் பேரேடு மற்றும் ஏனைய ஏற்புடைய ஆவணங்களில் பெறுமதிகள் சமமாதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள் , ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் , ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆவது பிரிவு | நிதி அமைச்சரின் அனுமதி பெற்றுக்கொள்ளாது மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.31,387,500 ஐ முதலீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு தொடக்கம் சுற்றறிக்கை பிரகாரம் திறைசேரி அனுமதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | நிதிச் சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1995 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்க இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக (திருத்தம்) சட்டத்தில் 15 ஆவது பிரிவில் பந்தி (VI) | நிதி அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டிய ஆளுகைச் சபையின் உறுப்பினர்கள் கல்வி, நிதி, சட்டம் மற்றும் நிருவாக துறைகளில் சிறப்பான சேவைகளை நிறைவேற்றியுள்ள நபர்களாதல் வேண்டும். கட்டுப்பாட்டுச் சபையின் நிதித் துறையில் | 2021.01.01 ஆம் திகதி பல்கலைக்கழகத்தால் இது தொடர்பில் கல்வி அமைச்சிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்காக பட்டயம் பெற்ற கணக்காளர் ஒருவரை, பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், | 1995 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்க இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக (திருத்தம்) சட்டம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நபரொருவர் இருக்கவில்லை என்பதுடன், சட்டத் துறையில் இரண்டு அலுவலர்களை நியமனம் செய்யப்பட்டிருந்தது. | நிதி குழு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஆகிய இரண்டு குழுக்களுக்கும் திறைசேரி பிரதிநிதியாளர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 07 ஆம் திகதிய 09/2019 ஆம் இலக்க பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இணைப்பு (i) இணைப்பு 3 – A | தரப் பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளர் பதவி, ஏனைய பிரதான நிருவாக பொறுப்புகளுக்கு புறம்பான முழுநேர காலப் பதவி ஆதல் வேண்டுமாயினும், பௌத்த கற்கைப் பிரிவின் பீடாதிபதி பேராசிரியர் ஒருவரை அப் பதவியில் நியமனம் செய்யப்பட்டிருந்தது. | இந்தப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 71 ஆகும். அதில் 20 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக இதுவரை அனுமதி கிடைக்கப்பெறவில்லை.<br><br>அத்தகைய நிலைமையில் தரப் பாதுகாப்பு நிலையத்தின் பூரண நியமனம் மேற்கொள்வதற்கு இயலாது. தற்போது காணப்படும் நடைமுறை நடைமுறைக்கமைவாக இச் சந்தர்ப்பத்தில் முழுநேர காலப்பகுதிக்க வேறு பொறுப்புகளிலிருந்து வெளியக ஆசிரியர் ஒருவரை நியமிக்க இயலாமை | சுற்றுநிருபங்களுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) இணைப்பு 3 - B (2) | புணிப்பாளரால் தரப் பாதுகாப்பு பிரிவுக்காக தொழில்பாட்டு வழிகாட்ட-ல்களை தயாரித்தல் மற்றும் பிரிவின் பொருட்டு மூன்று ஆண்டுகளிலான மூலோ-பாய திட்டம் தயாரித்து ஆளுகைச் சபையில் அங்கீகரித்துக் கொள்ளுதல் வேண்டுமாயினும், அதற்காக 2022 ஆம் ஆண்டில் குழுவொன்றை மட்டும் நியமிக்க-ப்பட்டிருந்தது. | சேனட் சபையின் அனுமதிக்-கமைவாக தரப் பாதுகாப்பு நிலையம் பொருட்டு 03 ஆண்டுகளிலான மூலோபாய திட்டம் தயாரிப்பதற்கு நியமனம் செய்யப்பட்ட துணைக்குழு பல அமர்வுகளில் சந்தித்து அதன் வரையுள் தயாரிப்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கைகள் முன்னெடுத்தல்.<br><br>இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் தொழில்பாட்டு வழிகாட்டல் கோவை தயாரிப்பதற்காக செனட் சபையின் அனுமதியுடன் துணைக்குழு நியமனம் செய்யப்பட்டு தற்போது இந்த வழிகாட்டல் கோவை வரையுள்படுத்தப்பட்டுள் ளமை. | சுற்றுநிருப ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (iii) இணைப்பு 3 – C (4) | பணிப்பாளரின் பணிகளை மேற்கொள்வதற்காக நிரந்தர அடிப்படையில் உதவி பதிவாளர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் வேலை உதவியாளர் நியமனம் செய்தல் வேண்டுமாயினும், தற்காலிக அடிப்படையில் உள்ளக பரீட்சை பிரிவால் உதவி பதிவாளர் மற்றும் பௌத்த கற்கை பீடத்தின் முகாமைத்துவ உதவியாளர் நியமனம் செய்யப்பட்டிருந்தது. | மூன்று பிரிவுகளின் பொருட்டு போதியளவு அலுவலர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் கீழ் வேறு நிரந்தரமாக ஒருவரை நியமனம் செய்வதற்கு இயலவில்லை. ஆகையால் தரப் பாதுகாப்பு நிலையத்திற்கு நிரந்தர அடிப்படையில் அந்தப் பதவிகளை உருவாக்குவதற்கு கல்வி அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன், கலந்துரையாடப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கைனயை முன்னெடுத்தல் | சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைபயன்**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா .11,165,325 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு ரேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.47,275,438 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.58,440,763 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு மீண்டுவரும் செலவினங்களுக்காக அரசாங்கத்தின் உதவி ரூபா.44,895,000 மற்றும் முதலீட்டு வருமானம் அத்துடன் கடன் வட்டி வருமானம் ரூபா.9,440,559 ஆன அதிகரிப்பு பிரதான காரணங்களாகின.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்குகளின் பகுப்பாய்வு**

கடந்த ஆண்டில் ரூபா. மில்லியன் 440.2 ஆன ஒட்டுமொத்த வருமானம் மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.மில்லியன் 546.5 அதாவது 24% ஆல் அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டிலும் மீளாய்விற்கான ஆண்டிலும் பல்கலைக்கழத்திலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் ஒழுங்குமுறையில் ரூபா.மில்லியன் 23.2 ம் மற்றும் ரூபா.மில்லியன் 84.5 ம் ஆகியதால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உழைக்கப்பட்ட வருமானம் மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.மில்லியன் 61.3 ஆல் அதாவது 264 % ஆல் அதிகரித்திருந்தது.

கடந்த ஆண்டில் மற்றும் மீளாய்விற்கான ஆண்டில் பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த செலவினம் ஒழுங்குமுறையில் ரூபா.மில்லியன் 487.3 ம் ரூபா.534.8 மில்லியன் ஆகியதால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் 47.5% ஆல் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

மீளாய்விற்கான ஆண்டில் நடைமுறை விகிதாசாரம் மற்றும் உடனடி விகிதாசாரம் ஒழுங்குமுறையில் 0.6 : 1 மற்றும் 0.54 : 1 ஆகியதுடன், கடந்த ஆண்டில் குறித்த விகிதாசாரம் ஒழுங்குமுறையில் 1.05 : 1 மற்றும் 0.98 : 1 ஆகும்.

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் 05 அலுவலர்களிடம் வழங்கப்பட வேண்டிய மொத்தம் ரூபா.2,166,924 ஆன ஆராய்ச்சிப் படிகளுக்கு ஏற்புடையதான ஆராய்ச்சிப் பத்திரம் 2023 மே 31 ஆம் மாதமாகியும் முடிவுறுத்தப்படவில்லை. | ஆராய்ச்சிப் பத்திரம் முடிவுறுத்தப்பட்டு ஒப்படைப்பதற்கு அனைத்து கற்கை பதவியணியையும் அலுவலர்களையும் அறிவுறுத்தப்படுதல். | அனைத்து ஆராய்ச்சிகள் தொடர்பில் ஆராய்ச்சி குழுக் கூட்டங்களை நடாத்தி முன்னேற்றம் அவதானிக்கப்பட்டு, உரிய திகதியில் ஆராய்ச்சிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2017 ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு லீவு | எதிர்வருங் காலங்களில் இத்தகைய குறைப்பாடுகளை தவிர்த்துக்-கொண்டு செவ்வைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | பிணை பெறுமதி செவ்வையாக கணக்கிடல் வேண்டும். |

பெற்றுக்கொண்ட மூன்று விரிவுரையாளர்களின் பிணைப் பெறுமதி கணக்கிடுகையில் வருடாந்த சம்பள வேற்றங்களுக்கமைவாக ஆராய்ச்சிப்படி மற்றும் கற்கைப் படி கவனத்தில் கொள்ளாமையால் ரூபா.5,595,834 குறைவாக கணக்கிடப்பட்டது.

## 3.2 ஒப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா.190,135,000 ஆன (வெட் வரியற்ற) 200 வெளிநாட்டு மாணவர்களின் பொருட்டு வதிவிட கட்டிடம் நிருமாணிக்கும் கருத்திட்டம் 2021 ஏப்ரல் 11 ஆம் திகதி முடிவுறுத்தப்படுதல் வேண்டு-மாயினும், ஒப்பந்தக் காலம் இரண்டு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டதன் பின்னர் முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதியாக காணப்பட்டது. 2022 பெப்ருவரி 28 ஆம் திகதியில் ஒப்பந்தக்காரரிடம் ரூபா.148,336,250 செலுத்தப்பட்டிருந்ததுடன், 2022 மே மாதம் தொடக்கம் கட்டுமானப் பணிகள் கைவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தம் கைவிடப்பட்டமையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் செயலாற்றுகை பிணை காலவதியாவதற்கு முன்னர் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமை மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக 05 மாதங்களுக்கு அதிகமான காலம் வேலைத்தளம் மூடி வைக்கப்பட்டிருந்தமையால் இரண்டு அமர்வுகளில் கட்டுமானப் பணிகளின் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.<br><br>கட்டுமானங்களை ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளாத படியால், சட்டத்துடனான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2023.03.21 ஆம் திகதி கல்வி அமைச்சின் சட்ட அலுவலருடன் கூட்டம் நடாத்தப்பட்டு 2023.04.11 ஆம் திகதி கடிதமொன்றை ஒப்பந்த நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்படுதல்.<br><br>அதேபோன்று செயலாற்றுகை பிணை இற்றைப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்தை அறிவுறுத்தப்படினும், அதற்கு பதில் இல்லாமை | ஒப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகளை செவ்வையாக்கிக் கொண்டு உரிய வகையில் ஒப்பந்தம் முடிவுறுத்துவதற்கும், அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் செயலாற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மதிப்பீட்டு பெறுமதி ரூபா. 252,327,545 ஆன இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத்தில் 05 மாடி கட்டுமானம் பொருட்டு, 2019 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி ஒப்பந்தக்கார-ர்களிடம் ரூபா.14,508,834 ஆன முற்பணம் வழங்கியிருப்பினும், | தற்போது ஒப்பந்தக்காரரிடம் செலுத்தப்பட்டுள்ள முற்பணத் தொகையில், இதுவரை மேற்கொண்டுள்ள பணிகளுக்காக இரசீது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த இரசீது பரிசீலனை செய்வதற்காக கட்டிடத் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல். | ஒப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகளை செவ்வையாக்கி கொள்ளுதல். |

மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை கட்டுமான நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படவில்லை. 03 ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதி தனிப்பட்ட ஒப்பந்தக்காரரின் கையிருப்பில் இருந்த பணத் தொகையை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

### 4.1 வருடாந்த செயற்றிட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் செயற்றிட்டம் பிரகாரம், கல்வி கற்கைநெறிகளை அபிவிருத்தி செய்கின்ற நோக்கத்தின் கீழ் கற்கை-நெறிகளின் பாடவிதான-ங்களை இற்றைப்படுத்தல் மற்றும் பல்வேறு தொழில்-வல்லுநர்களை இலக்காகக்கொண்டு குறுகிய கால கற்கை-நெறிகளை அறிமுகப்படு-த்தல் வேண்டுமாயினும், சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ளப்படவில்லை.<br><br>டிப்ளோமா மற்றும் குறுகியகால கற்கைநெறி-களின் பொருட்டு மீளாய்-விற்கான ஆண்டில் ஒவ்-வொரு பாடங்களின் பொருட்டும் 100 இற்கு குறைந்த மாணவர்கள் பதிவாகியிருந்தனர். | பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை-யிலான பெறுமதியிலும் பார்க்க அதிகளவிலான எண்ணிக்கை பதிவு செய்திருத்தல். | செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அண்மித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |